# 11 ஆண்டாள் திருப்பாவை

திருமாலின் அன்பில் (பக்தியில்) ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர். ஆழ்வார்கள் பன்னிருவர், அவர்களுள் ஆண்டாளும் ஒருவராவர். அவர் பெரியாழ்வாரின் மகள். ஆண்டாள் திருமாலிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர்; அவர் மீது திருப்பாவை, நாச்சியார் திருமொழி எனும் பிரபந்தங்களைப் பாடிப் போற்றியவர். அப்பாடல்கள் நாலாயிரத் திவ்ய பிரபந்தம் என்னும் தொகுப்பினுள் அடங்கியுள்ளது.

ஆண்டாள், திருவாய்ப்பாடிப் பெண்கள் மார்கழி நோன்பு நோற்பதைக் கண்டு அனுபவித்த அனுபவ உணர்வுகளைத் திருப்பாவையாகப் பாடினார். அப்பாடல்கள் வில்லிபுத்தூரை திருவாய்ப்பாடியாகவும் வடபெருங் கோயிற் பெருமானைக் கண்ணனாகவும் தன்னைக் கோபியர்களில் ஒருத்தியாகவும் தனது தோழிகளைக் கோபிகாஸ்திரிகளாகவும் மனதில் உருவகித்து பாடப் பட்டவையாகும். ஆண்டாள் திருப்பாவை மூலமாக, உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினையும் அடியவர்கள் இறையடியார்களுடன் கூடி வாழ்தலே மனச் செம்மையைத் தரும் என்பதையும் உணர்த்துகின்றார். அதன் மூலம் உயிர்கள் இறைவனுடன் கூடி இருத்தலே பேரின்பம் என்பதை எடுத்துரைக்கின்றார்.

திருப்பாவை முப்பது பாசுரங்களைக் கொண்டது; ஆண்டாள் திருமாலிடத்தே கொண்ட பக்தியை உணர்த்துவது; விஷ்ணு ஆலயங்களில் மார்கழி 31 நாளும் பாடப்படுவது. காலையில் இறைவனைத் துயில் எழுப்பி அவரது திருவடிகளை வணங்கி கடமைகளில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தை ஆண்டாள் அப்பிரபந்தங்களில் வற்புறுத்துகின்றார். ''ஆழி மழைக் கண்ணா...'' என்ற திருப்பாசுரம் திருப்பாவையில் அடங்கும் நான்காவது பாடலாகும். அதனை இங்கு கற்போம்.

**தலம் - வில்லிபுத்தூர் வடபெருங் கோயில் ராகம் - சௌராட்சரம்**

ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்;
ஆழியுள்புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழி நீராட மகிழ்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:-**

ஆழி மழைக் கண்ணா - மழைக்குத் தலைவனே; ஒன்று நீ கைகரவேல் - நீ சிறிதும் உன் வள்ளல் தன்மை ஒன்றையும் ஒழிக்காதே; ஆழியுள்புக்கு முகர்ந்து கொடு ஆர்த்து ஏறி - நீ கடலுள் ஆழப் புகுந்து நீரை முகந்து பெரு முழக்கோடு வானில் ஏற வேண்டும்; ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து - விஷ்ணுவின் திருமேனி போல முகிலானது கறுத்தும்; பாழியந் தோளுடைப்பற்பநாபன் கையில் ஆழி போல் மின்னி - பருத்த வலிமை உடைய பத்மநாபனின் வலது கையில் உள்ள சக்கரத்தைப் போல் மின்னிப் பிராகாசித்து; வலம்புரி போல் நின்றதிர்ந்தும். அவரது இடது கரத்தில் உள்ள வலம்புரிச் சங்கு போல் முழக்கம் செய்தும்; தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல் - வில்லில் இருந்து விடப்பட்ட அம்பைப் போல மழையைப் பொழிந்து அழித்து விடாது உலகோர் வளமாக வாழப் பொழிய வேண்டும்; வாழ உலகினில் பெய்திடாய் - ஆனால், அதிக மழையைப் பொழிய வேண்டும்; நாங்களும் மார்கழி நீராட மகிழ்தேலோர் எம்பாவாய் - கண்ணனை அடைவதற்காக நோன்பு நோற்கும் நாங்களும் மகிழ்ந்து நீராட, சடசடவென மழையைப் பொழிவாயாக.

**பொழிப்புரை:**

மழைக்குத் தலைவனே! நீ சிறிதும் உன் வள்ளல் தன்மை ஒன்றையும் ஒழிக்காதே. ஆழ்கடலில் புகுந்து நீரை முகந்து கொண்டு (நீராவியாக்கி) பேரொலியோடு ஆகாயப் பரப்பில் ஏற வேண்டும். விஷ்ணுவின் திருமேனி போல உன்மேனி கறுத்து, பத்மநாபனின் பருத்த வலிமை உடைய வலது கரத்தில் பொருந்திய சக்கரத்தைப் போல மின்னிப் பிரகாசித்தும், அவரது இடது கரத்தில் உள்ள வலம்புரிச்சங்கு போல, நிலைநின்று முழக்கம் செய்தும் வில்லில் விடப்பட்ட அம்பைப் போல மழை பொழிய வேண்டும். ஆனால், அதிகமாகப் பொழிந்து அழித்து விடாது, உலகோர் வளமாக வாழப் பொழிய வேண்டும். கண்ணனை அடைவதற்காக நோன்பு நோற்கும் நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட, சடசடவென மழையைப் பொழிவாயாக.

## பாடச் சுருக்கம்

- திருமாலின் அன்பில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர்.
- பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான ஆண்டாள் பெரியாழ்வாரின் மகள்.
- ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பவற்றைப் பாடியவர்.
- பன்னிரு ஆழ்வார்களின் பாசுரத் தொகுப்பு **நாலாயிரத்திவ்ய பிரபந்தம்** எனப்படும்.
- திருப்பாவையில் ஆண்டாள், இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு, பக்தி, வழிபாடு என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
- திருப்பாவையை மார்கழி நோன்பின் போது விஷ்ணு ஆலயங்களில் அதிகாலையில பாடுவர்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆழ்வார்கள் என்போர் யாவர்? நீங்கள் அறிந்த ஆழ்வார்கள் இருவரின் பெயர்களைத் தருக.
2. ஆண்டாள் பாடிய பிரபந்தங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. திருப்பாவையில் கூறப்படும் பொருள் மரபினைத் தொகுத்து எழுதுக.
4. திருப்பாவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை எழுதுக.

## ஆ. செயற்பாடு

- ‘‘ஆழி மழைக்கண்ணா...’’ என்ற திருப்பாசுரத்தை மனனம் செய்து வகுப்பறையில் இசையுடன் பாடுக.
- அதன் பொழிப்புரையையும் எழுதுக.
- ‘‘ஆழி மழைக்கண்ணா...’’ என்ற திருப்பாசுரத்தைப் பாடும் போது உங்கள் நினைவுக்கு வரும், ஒத்த திருமுறைப் பாடலைச் சேகரித்து காட்சிப்படுத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக